# திசைகாட்டி கலை இலக்கிய மன்றம்



இது முன்மாதிரியான
விசா ஆலோசனை நிறுவனமான
"திசைகாட்டியின்" சமூக நோக்கோடு கூடிய
கைங்கரியங்களில் ஒன்றாகும் ..

## 15/12/2013 இடம்பெறும் கால்கோள் விழா தொடர்பான சிறப்புக் கையேடு.

வெளியீடு:-
திசைகாட்டி (பிறைவேற்)லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212219016, 0215689090.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

கலையும் அறிவும் கண்ணெனக் கருதி

மானிட வர்க்கத்தின் உயர்வுக்காக

உழைத்திடும் அனைத்து உள்ளங்களிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திசைகாட்டியின் தோற்றப் பின்னணி...

இது இலாப நோக்கான வியாபார நிறுவனமாக இருந்த போதும் காலத்தின் தேவை கருதியே யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. காலத்தின் தேவை என்ன? யாழ் குடாநாட்டில் அண்மைக் காலமாக இளைஞர் யுவதிகள் கல்வி கற்பதற்கான "மாணவர்களுக்குரிய விசா" மீது ஆர்வம் கொண்டுள்ளனர். இதற்காக பல நிறுவனங்கள் கவர்ச்சியான விளம்பரங்களுடன் மேலத்தேய பாணியில் அமைந்த பெயர்களுடன் வெளியிடங்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு படையெடுத்தன.இந் நிறுவனங்கள் புறத்தோற்றத்தாலும், அளவுகடந்த உள்ளக வசதிகளாலும், இந் நிறுவனப் பணியாளர்களின் ஆங்கிலம் கலந்த வாய்ப் பந்தல்களாலும் கவரப்பட்ட எம் ஊர் இளைஞர் யுவதிகள் பல இலட்சம் ரூபாய்களை முற்பணமாக அள்ளி அவர்கள் கையில் வழங்கினர். முற்பணங்களுக்குரிய பற்றுச் சீட்டுக்கள் எவையும் பெறப்பட்ட வரலாறுகளும் இருக்கவில்லை என்பது தான் இங்கே வேதனைக்குரிய விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களில் பல பேருக்கு நிலையான தொலைபேசி வசதிகள் கூட இருக்கவில்லை.

இந்த நிலையில் இரண்டொரு மாதத்தில் எதுவும் நிகழாமலே அந்தக் கனவான்களின் செல்லிடப் பேசியும் செயலிழந்து விட எம்மவர்கள் செய்வதறியாது தவித்தனர். இந்த நிலையில் சரியான விசா நடைமுறைகள் அதாவது ஒரு நாட்டிற்கு, கல்விக்காகவோ அல்லது வேறு எந்தத் தேவைகளுக்காகவோ செல்ல வேண்டுமாயின் அந் நாட்டுக் குடிவரவு நடைமுறைகள் எவை? அவற்றிற்குரிய கட்டணங்கள் என்ன அவற்றிற்குரிய விளக்கங்களை குறைந்த கட்டணத்தில் வழங்கவும் **திசைகாட்டி** ஏற்படுத்தப்பட்டது. தற்போது, தான் ஸ்தாபிக்கப்பட்ட நோக்கத்தை வெற்றிகரமாக அடைந்ததுடன் தொழில் முறையான நிறுவனமாக நவீனத்துவமடைந்து இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றது. அத்தோடு சமூக நோக்கோடு பலதரப்பட்ட கைங்கரியங்களையும் ஆரம்பித்துச் செயற்படுத்தி வரும் திசைகாட்டி முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம் என்கின்ற அந்தஸ்தைப் பெற அருகதை உடையதாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் திசைகாட்டி தலைவர் (Chairman)

## விடுக்கும் ஆசிச் செய்தி.



**CHAIRMAN:-**

**Mr.S.SELVARAJAH,**

**(AICIA-FEDERAL CHARTER)**

**AIPFM (UK), MFBA (UK), ASMA (UK),**

**FIBA (UK), MAAT.**

**மதிப்பு மிக்க அன்புள்ளங்களே!**

3 வருடங்களின் முன் எமது நேசத்திற்குரிய நண்பரும் மனித உரிமைகள் தொடர்பான சட்டத்தரணியுமான திரு.நிறஞ்சன் அவர்கள் தமது கல்லூரி காலத்து நண்பர்களாகிய எம்மையும் இணைத்து ஆரம்பித்ததே இந்த நிறுவனம். எமது பிரதேசத்தில் விசா தொடர்பான விற்பனை நிறுவனங்களும் மோசடிகளும் நிறைந்திருந்த அக் காலகட்டத்தில் விசா விழிப்புணர்வை எம் இளைஞர் யுவதிகளிற்கு அளிக்கும் நோக்கோடு அவர் இந்த முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனமான திசைகாட்டியை ஸ்தாபித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசா ஆலோசனைத் துறைக்கு சற்றும் தொடர்பற்ற வேறு துறைகளைச்சார்ந்த எமக்கு இதனைக் கொண்டு நடாத்துவது என்பது ஆரம்பத்தில் ஒரு சவாலாகவே அமைந்திருந்தது. அத்தோடு இத் துறையில் காணப்பட்ட அநாகரிகமான கறைபடிந்த மோசடி வரலாறுகள் எம்மையும் இச் சமூகம் ஒரு சந்தேகக் கண்ணுடன் தான் பார்க்க வைத்தது. இந்தத் தொழில் புரிபவர்கள் மோசடிக்காரர்கள் என்ற எண்ணம் ஆழமாக எம்மவர்கள் மத்தியில் பதிந்திருந்தது இருப்பினும் கண்ணியத்துடன் சமூக நோக்கோடும் எங்கள் வணிகம் முன்னெடுக்கப்பட்டு இன்று சாதனை நிறுவனமாக,தொழில்சார் நிறுவனமாக அனைவரினதும் அபிமானம் பெற்று அபரிதமான வளர்ச்சியைக் கண்டுள்ளமை இங்கே கோடிட்டுக் காட்டக் கூடிய அம்சமாகும்.

இவ்விடத்தில் மிக முக்கியமானதொரு விடயத்தை தங்கள் மேலான கவனத்திற்கு அறியத்தருகிறேன். பொதுவாக வர்த்தக வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளை மீறி தனித்தமிழில் பெயர் சூட்டியது மட்டுமன்றி எமது விளம்பர வியாபார முன்னெடுப்புக்களும் அழகு தமிழில் எமது பிரதேச உரைநடையில் அமைந்திருந்தமையும் எமது வியாபார வெற்றிக்கான பிரதான காரணங்களில் ஒன்றாகும். எமது சந்தைப்படுத்தல் பிரிவின் விளம்பரங்களை வாசித்து அதற்கு ஒரு ரசிகர் கூட்டம் விமர்சகர் கூட்டம் உருவானமை நீங்கள் அறிந்த நிதர்சனமான உண்மையாகும்.

இந்த வகையில் எமது சந்தைப்படுத்தல் பிரிவின் தனித்துவமான இந்த சாதனைப் பயணமானது தலைநகரின் வர்த்தக சமூகத்தால் வியப்புடன் உற்றுநோக்கப்படுகின்றது.

வெறுமனே 3 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த ஒரு பிரதேச சேவை நிறுவனம். மாதாந்தம் 1000 இற்கே மேற்பட்ட வாடிக்கையாளர்கள் வந்து சேவை பெறும் நிறுவனமாக மாறியமை எவ்வாறு?
இதன் பின்னணி என்ன என வணிக ஆய்வாளர்கள், பொருளியல் விற்பன்னர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியந்து பார்க்கும் கட்டமைப்பாக எங்கள் சந்தைப்படுத்தல் பிரிவு உற்று நோக்கப் படுகின்றமை உண்மையிலும் உண்மை.

இந்த வகையில் 'கடல் கடந்த விசா ஆலோசகர்கள் கூட்டமைப்பு' எமது சந்தைப் படுத்தல் குழுவிற்கு சாதனை விருது ஒன்றை சிபார்சு செய்தது.

இதன் பின்னணி எமது சந்தைப்படுத்தல் பிரிவில் அங்கம் வகிக்கும் கலை இலக்கிய ஆர்வம் கொண்ட அன்பர்களின் எழுத்தாற்றலே என்பதை இனங்கண்டு கொண்டோம். அத்தகைய ஆர்வலர்களின் எண்ண வெளிப்பாடே இன்றைய இந்த ஆரம்ப விழா. அவர்களின் உழைப்பிற்கும் திறமைக்கும் கிடைத்த மேலதிக நிதிக் கொடையை இச் சமூகத்தின் இலக்கியத்துறைக்கு அர்ப்பணிக்க அவாவி நின்றனர். அதன் இனிய விளைவே இந்த திசைகாட்டி கலை இலக்கிய மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மன்றம் எமது நிறுவனத்தின் வியாபார முன்னெடுப்பு அலகாகத் தொழிற்படாது. புத்தி ஜீவிகளான உங்கள் சேர்க்கைக்காகவே இது தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அறிவோர் கூடி எங்கள் சமூகத்தை வழிநடாத்தக் களம் அமைத்துக் கொடுத்துள்ளோம். அவ்வளவுதான் வணிகத்தின் உச்ச இலக்கை அடைந்த நிலையில் இருக்கும் எமக்கு இவ்வாறான துணை அமைப்புக்களினூடாக வணிக மேம்பாடு மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லாதிருப்பது உண்மையே. எனவே ஜனநாயக ரீதியாக, முழுச் சுகந்திரத்துடன் எழுத்தாளர், கலைஞர்களாகிய நீங்கள் பணியாற்ற முடியும் என்பதே எமது முடிந்த முடிவு. நிதியூட்ல் புரிவதால் எம்மிடம் "வீட்டோ" அதிகாரம் இருக்கமாட்டாது. உங்கள் எண்ணம் போல் வெளியீடுகள், கலையரங்குகள், ஒன்று கூடல்கள், விருதுகள் என நீவிர் நடாத்த நாம் வழி சமைத்துள்ளோம். இங்கே பாகப்பிரிவினைகள் இல்லை, பாவங்களும் இல்லை, எம்மால் முடிந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இரண்டு இலட்க், இது ஆண்டு தோறும் உங்களிற்கு கிடைக்கும்.

மேலதிக தேவைப்பாடுகளிற்கு நியாய பூர்வமாக குறை நிரப்பப்படும். மன்றத்திற்கு தனி அறை, தொலைபேசி வசதி, அலுவலகத் தொடர்புகளுக்கு எமது இணைப்பாளராக நியமிக்கப் பட்டிருக்கும் எமது பணியாளரும் மூத்த ஊடகவியலாளருமானதிருM.வாமதேவன் இவையே எங்கள் தரப்பின் ஏனைய கொடையாகும்.

திசைகாட்டி (குறூப்) இன் இயக்குனர் சபை உறுப்பினர்களோ அன்றேல் பணியாளர்களோ அல்லது அவர்களது குடும்ப உறவினர்களோ திசைகாட்டி கலை இலக்கிய மன்றத்தில் உறுப்பினர்களாகச் செயற்பட முடியாது. சேரவும் கூடாது. கருத்துக்கள் கூறமுடியாது. இது எமது இயக்குநர் சபை முடிவாகும்.

**நன்றி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Sri Maruthi Printers*
*0777917680*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org